FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8313251

1. District மாவட்டம் : மயிலாடுதுறை PS காவல்நிலையம் : மயிலாடுதுறை ஊ.த.ம.ந பிரிவு, Year ஆண்டு : 2026 FIR No முத.அ. எண் : 03/2026 Date நாள் : 18.07.2026

2. (i) Act சட்டம்: BNSS — Sections பிரிவுகள்: 106 BNSS
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: 7, 12 r/w 7 of the
(iii) Act சட்டம்: P.C. Act. — Sections பிரிவுகள்: P.C Act 1988 as amend by the P.C (Amended) Act -2018 -
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day / குற்ற நிகழ்வு நாள் : Date from நாள் முதல் : 17.07.2026 Date to நாள் வரை :
Time Period / நேர அளவு : Time from நேரம் முதல் : 17.00 Hrs Time to நேரம் வரை : 23.45 Hrs.
(b) Information Received at PS. Date / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 18.07.2026 Time / நேரம் : 09.00 Hrs
(c) General Diary Reference : Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : Time / நேரம் : 13.00 Hrs.

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் : எழுத்துமூலமாக (கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number / முறைக் காவல் எண் :
(b) Address / முகவரி : 22 Km அடுத்து, சீர்காழி வட்டாட்சியர் அலுவலகம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S / இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் : District மாவட்டம் : மயிலாடுதுறை. —

6. Complainant /Informant (a) Name / குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : திரு. சந்தானன்
(b) Father's/ Husband's Name / தந்தை / கணவர் பெயர் : நாராயணசாமி,
(c) Date / Year of Birth / நாள் / பிறந்த ஆண்டு : 5-7-2026
(d) Nationality / நாட்டினம் : இந்தியர்
(e) Passport No. / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : —
Date of Issue / வழங்கப்பட்ட நாள் : —
Place of Issue / வழங்கப்பட்ட இடம்
(f) Occupation / தொழில் : தனவட்டாட்சியர்,
(g) Address / முகவரி : (தா.வா.ம. அலுவலகம், மயிலாடுதுறை. 1/c மாவட்ட நிலை அலுவலர் அலுவலர், மயிலாடுதுறை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) / தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) : (1) திரு. R. ராஜாரத்தினம், வட்டாட்சியர், சீர்காழி தாலுகா, (2) திரு. S. சுகுணசேகர், TEXCO Driver, சீர்காழிவட்டாட்சியர் அலுவலகம், (3) திரு. R. பாபுதுரை. VAO, மணல்மேடு. (4) திரு. R. பிரதீஷ், VAO, திருவாலங்காடு

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் : மயிலாடுதுறை மாவட்டம்.

தகவல் முகாமிப்பதால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

பணிந்து சமர்பிக்கப்படுகிறது

இன்று 18.07.2026 ஆம் தேதி காலை 0900 மணிக்கு மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் M.அருள்பிரியா ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திரு.N.சுகுமாறன், த/பெ. நாராயணசாமி, தனி வட்டாட்சியர், (குடிமைப் பொருள் வழங்கல் அலுவலகம், மயிலாடுதுறை, பொறுப்பு மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மயிலாடுதுறை மாவட்டம் என்பவர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின்படி வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு. அனுப்புநர் திரு.N.சுகுமாறன், த/பெ. நாராயணசாமி, தனி வட்டாட்சியர், குடிமைப் பொருள் வழங்கல் அலுவலகம், மயிலாடுதுறை, பொறுப்பு மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மயிலாடுதுறை மாவட்டம பெறுநர் காவல் ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மயிலாடுதுறை. அம்மா, நான் மயிலாடுதுறை மாவட்டத்தில் மயிலாடுதுறை தாலுக்கா அலுவலகத்தில் தனி வட்டாட்சியர், குடிமைப் பொருள் வழங்கல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

[இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது]

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

18.7.26.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
18/07/2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
18.07.2026.

Name: பெயர் M. அருள்பிரியா,
Rank: நிலை காவல் ஆய்வாளர்
ஊ.த.ம.த. பிரிவு,
மயிலாடுதுறை.

ந.க.அ1/9499/2026, நாள் 17.07.2026 இல் கண்ட உத்தரவின்படி 17.07.2026 ஆம் தேதி 16.00 மணிக்கு நான் மற்றும் திரு.ப.வேல்முருகன், த/பெ.பரந்தாமன், முதுநிலை வருவாய் ஆய்வாளர், தனிவட்டாட்சியர் அலுவலகம்(தேர்தல்), மாவட்ட ஆட்சியரகம், மயிலாடுதுறை ஆகிய இருவரும் மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்தோம். மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்தில் பிறப்பு இறப்பு சான்று, சாதி சான்று, பட்டா மாறுதல், வருமான சான்று மற்றும் வாரிசு சான்று, நீர் நிலைகளை தூர்வாரும் பணி மற்றும் இதர பணிகளுக்காக வரும் பொதுமக்களிடம் கையூட்டு கேட்டுப்பெறுவதாக மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசிய தகவலினை ஆய்வாளர் என்னிடம் தெரிவித்தார். அதன்படி 17.07.2026 தேதி 17.00 மணிமுதல் 23.45 மணிவரை மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர் மற்றும் காவலர்களுடன் சேர்ந்து மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின் போது சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்தில் பிறப்பு இறப்பு சான்று, சாதி சான்று, பட்டா மாறுதல், வருமான சான்று மற்றும் வாரிசு சான்று, நீர் நிலைகளை தூர்வாரும் பணி மற்றும் இதர பணிகளுக்காக வரும் பொதுமக்களிடம் கையூட்டு கேட்டுப்பெற்று/கொடுப்பதற்க்காக வைத்திருந்த கையூட்டு பணம் என்ற அடிப்படையில் 1) திரு.R.ராஜரத்தினம், வட்டாட்சியர், சீர்காழி அவர்களை விசாரித்து சோதனை செய்தபோது அவர் தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்த பர்சிலிருந்து ரூபாய். 4,000/-, மற்றும் அவரது சட்டை பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூபாய். 850/-, ஆக மொத்தம் ரூபாய். 4,850/-, 2) திரு.R.ராஜரத்தினம், வட்டாட்சியர் அவர்களின் அரசு வாகனம் TN82 G 0180 BOLEROவை சோதனை செய்ய வாகனத்தின் Dash board -லிருந்த காக்கி நிற கவரிலிருந்து ரூபாய் 25,000/- 3) திரு.S.கணேஷ்குமார், TEXCO Driver அவர்களை விசாரித்து சோதனை செய்தபோது அவர் தனது சட்டையின் மேல்பையிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூபாய். 5,720/-, 4) திரு.R. பாபுதுரை V.A.O, உமையாள்பதி அவர்களை

விசாரித்து சோதனை செய்தபோது அவர் தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்த மணி பர்சிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூபாய். 2,500/-, 5) திரு. R.பிரதீஷ், V.A.O, ஆலாலசுந்தரம் அவர்களை விசாரித்து சோதனை செய்தபோது அவர் தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்த மணி பர்சிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூபாய். 4,700/-, ஆக மெத்தம் ரூபாய். 42,770/- தொகை கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.R.ராஜரத்தினம், வட்டாட்சியர், சீர்காழி அவர்களின் 9952328268 என்ற தெலைபேசி G-pay transaction விபரங்களை ஆய்வு செய்த போது, கடந்த 19.04.2026 ஆம் தேதியிலிருந்து 15.07.2026 ஆம் தேதி வரை உள்ள transaction- இல் மொத்தம் ரூபாய் 1,16.500/-தொகையானது அவரது அலுவலக உதவியாளர் திரு. கமலகண்ணன் G-pay (தெலைபேசி எண் 8248601723) மற்றும் வாகன ஒட்டுனர் திரு. கணேஷ்குமார் அவர்களின் G-pay (தெலைபேசி எண் 7070090750) யிலிருந்து திரு.R.ராஜரத்தினம், வட்டாட்சியர், சீர்காழி அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள விபரம் தெரியவருகிறது. மேற்படி தொகையனது திரு.R.ராஜரத்தினம், வட்டாட்சியர், சீர்காழி அவர்கள் தனது அலுவலக உதவியாளர் மற்றும் வாகன ஒட்டுனர் மூலமாக தனது அரசு பணியை செய்வதற்கு பொதுமக்களிடமிருந்து கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்று கருதப்பட்டது. மேலும்(1) சீர்காழி வட்ட அலுவலகம் வருகை பதிவேடு 2026, (2) சீர்காழி வட்ட அலுவலகம் வருகை பதிவேடு சுருக்கம் 2026, (3) சீர்காழி வட்ட அலுவலகம் தாமத வருகைபதிவேடு 2026, (4) சீர்காழி தாலுக்கா வட்ட வழங்கள் அலுவலகத்தில் 17.07.2026ம் தேதி இணையத்தில் நிலுவையில் உள்ள விபரங்கள் பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணம், (5) சீர்காழி வட்ட அலுவலகத்தில் 17.07.2026ம் தேதி இணைய வழி மனுக்கள் நிலுவையில் உள்ள விபரங்கள் பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணம், (6) சீர்காழி தாலுக்கா அலுவலகம் நில அளவை பிரிவு அலுவலகத்தில் 17.07.2026ம் தேதி இணையத்தில் நிலுவையில் உள்ள மனுக்களின் விபரங்கள் பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணம், (7) சீர்காழி தாலுக்கா சமூக பாதுகாப்பு திட்ட அலுவலகத்தில் 17.07.2026ம் தேதி இணையத்தில் நிலுவையில் உள்ள மனுக்களின் விபரங்கள் பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் ரூ. 42,770/- தொகை

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுக்கா அலுவலக பணியாளர்கள் கையூட்டாக பெற்ற/ கொடுப்பதற்கான பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் நடவடிக்கை மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின் போது பணம் கைப்பற்றப்பட்ட1) திரு.R.ராஜரத்தினம், வட்டாட்சியர், சீர்காழி தாலுக்கா மயிலாடுதுறை மாவட்டம், 2)திரு.S.கணேஷ்குமார், TEXCO Driver, சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம், 3)திரு.R. பாபுதுரை V.A.O, உமையாள்பதி, சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம், 4) திரு. R.பிரதீஷ், V.A.O, ஆலாலசுந்தரம், சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பெறப்பட்டது. மேற்படி திடீராய்வின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூபாய். 42,770/- திடீர் ஆய்வு செயல் முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மற்றும் பணம் கைப்பற்றப்பட்ட 4 நபர்களின் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை இந்த வேண்டுகோள் கடிதத்துடன் தங்கள் வசம் ஒப்படைக்கின்றேன். திடீர் சோதனையின் போது பணம் கைப்பற்றப்பட்ட1) திரு.R.ராஜரத்தினம், வட்டாட்சியர், சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம், 2)திரு.S.கணேஷ்குமார், TEXCO Driver, சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம், 3)திரு.R. பாபுதுரை V.A.O, உமையாள்பதி, சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம், 4) திரு. R.பிரதீஷ், V.A.O, ஆலாலசுந்தரம், சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம் ஆகியவர்களின் மீது உரிய சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.(ஒப்பம்) 18.07.2026 N.சுகுமாறன், தனி வட்டாட்சியர், குடிமைப் பொருள் வழங்கல் அலுவலகம், மயிலாடுதுறை, பொறுப்பு மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மயிலாடுதுறை மாவட்டம், திடீர் ஆய்வு செயல்முறை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர், இன்று 17.07.2026 ஆம் தேதி மாலை சுமார் 17.00 மணி முதல் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்தை திரு.N.சுகுமாறன், த/பெ. நாராயணசாமி, தனி வட்டாட்சியர், (குடிமைப் பொருள் வழங்கல் அலுவலகம், மயிலாடுதுறை, பொறுப்பு மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மயிலாடுதுறை மாவட்டம் மற்றும் திரு.ப.வேல்முருகன், த/பெ.பரந்தாமன், முதுநிலை வருவாய்

ஆய்வாளர், தனிவட்டாட்சியர் அலுவலகம்(தேர்தல்), மாவட்ட ஆட்சியரகம், மயிலாடுதுறை மற்றும் மயிலாடுதுறை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திருமதி.ம.அருள்பிரியா, மற்றும் மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து பொறுப்பு மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் திரு.N. சுகுமாறன், த/பெநாராயணசாமி, தனி வட்டாட்சியர், (குடிமைப் பொருள் வழங்கல் அலுவலகம், மயிலாடுதுறை, அவர்களால் தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் மகஜர் விபரம் பின்வருமாறு. மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி மெயின்ரோட்டின் கிழக்கு பக்கம் திருமுல்லைவாசல் ரோட்டில் வடக்குபார்த்த ஆர்ச்-க்கு உள்ளே மேற்கு பார்த்த வாசல் உடைய தனியார் கட்டிடத்தில் இயங்கிவரும் சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்தில், பிறப்பு இறப்பு சான்று, சாதி சான்று, பட்டா மாறுதல், வருமான சான்று மற்றும் வாரிசு சான்று, நீர் நிலைகளை தூர்வாரும் பணி மற்றும் இதர பணிகளுக்காக வரும் பொதுமக்களிடம் கையூட்டு கேட்டுப்பெறுவதாக மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இன்று 17.07.2026 ஆம் தேதி தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரிடம் தகவல் தெரிவித்ததன்பேரில், மாவட்ட ஆட்சியர் செயல்முறை ஆணை எண்.நக.அ1/9499/2026, நாள் 17.07.2026 இல் கண்ட உத்தரவின்படி, இன்று மதியம் சுமார் 16.00 மணிக்கு (பொறுப்பு) மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் திரு.N.சுகுமாறன், த/பெநாராயணசாமி, தனி வட்டாட்சியர், குடிமைப் பொருள் வழங்கல் அலுவலகம், மயிலாடுதுறை மற்றும் திரு.ப.வேல்முருகன், த/பெ.பரந்தாமன், முதுநிலை வருவாய் ஆய்வாளர், தனிவட்டாட்சியர் அலுவலகம்(தேர்தல்), மாவட்ட ஆட்சியரகம், மயிலாடுதுறை ஆகிய இருவரும் மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவகம் வந்தவர்களிடம் மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.அருள்பிரியா அவர்கள் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்தில் பிறப்பு இறப்பு சான்று, சாதி சான்று, பட்டா மாறுதல்,

வருமான சான்று மற்றும் வாரிசு சான்று, நீர் நிலைகளை தூர்வாரும் பணி மற்றும் இதர பணிகளுக்காக வரும் பொதுமக்களிடம் கையூட்டு கேட்டுப்பெறுவதாக தனக்கு கிடைத்த நம்பகமான தகவலை தெரிவித்து, மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்தை திடீர் ஆய்வு செய்யவேண்டியதன் அவசியத்தை கூறியதன் அடிப்படையில், மாலை சுமார் 16.15 மணிக்கு மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் மற்றும் விஜிலென்சு குழுவினருடன் அலுவலகத்திலிருந்து புறப்பட்டு மாலை சுமார் 17.00 மணிக்கு மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி வட்டாட்சியர் அலுவலகம் வந்து அலுவலகத்திலிருந்த திரு.R.ராஜாத்தினம், வட்டாட்சியர், சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம், திருமதி.சமேகலா, தனி வட்டாட்சியர், சமூக பாதுகாப்பு திட்டம், சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம், திருமதி.S.கனிமொழி, வட்ட துணை ஆய்வாளர், சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம், திரு.S.கணேஷ்குமார், ஓட்டுனர், சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம் திரு.K.கமலகண்ணன், அலுவலக உதவியாளர், சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம் மற்றும் அலுவலர்களிடமும் மற்றும் சீர்காழி வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வளாகத்தில் இருந்தவர்களிடமும் திடீர் ஆய்வு விபரம் பற்றி தெரிவித்து திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் பின்வருமாறு, மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டாட்சியர் அலுவலகமானது சீர்காழிலிருந்து திருமுல்லைவாசல் செல்லும் ரோட்டின் தெற்கு பக்கம் உள்ள ஆர்ச் உள்ளே முன்பக்கம் காம்பவுண்டில் இரண்டு தனி தனி கேட் உள்ளது. அதற்குள்ளே வட்டாட்சியரின் அரசு வாகனம் (TN82 G 0180 BOLERO) வடக்கு பார்த்தவாறு நிறுத்தப்பட்டிருந்தது. அதற்கு அடுத்ததாக மேற்கு பார்த்த வாசலுடைய வட்டாட்சியர் அலுவலகத்தில் முன்பக்கம் வராண்டாவும் அதற்கு அடுத்ததாக முன் வாசலும் அதற்கு உள்ளே பெரிய ஹாலும், அதற்கு இடது புறம் வட்டாட்சியர் அவர்களின் அறையும், ஹாலுக்கு எதிரே வலது பக்கம் வரிசையாக நில அளவை பிரிவும், அதற்கு வலது பக்கம் வெளியில் செல்வதற்கு ஒரு வாசலும் அலுவலகத்திற்கு இடது பக்கம் தனிவட்டாட்சியர், குடிமை பொருள் வழங்கல் அலுவலக அறையும் அதற்கு

மேற்கே தனிவட்டாட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் அவர்களின் அறையும் அதற்கு மேற்கே தேர்தல் பிரிவு அறையும் அதற்கு மேற்கே பொது கழிவறையும் உள்ளது. அலுவலகத்தில் உள்ள ஹாலின் நடுவில் வரிசையாக வட்டாட்சியர் அலுவலக அலுவலர்களின் இருக்கைகள் வரிசையாக உள்ளது. மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு). திருபவேல்முருகன். த பெயரந்தாமன். முதுநிலை வருவாய் ஆய்வாளர். மற்றும் மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினர் ஆகியோருடன் சீர்காழி வட்டாட்சியர் அலுவலகம் சென்று அங்கிருந்த அனைவரிடமும் தங்களையும். தங்களுடன் வந்தவர்களையும் அறிமுகம் செய்தபோது. மேற்படி அலுவலகத்தில் இருந்தவர்கள் அவரவர் இடத்தை விட்டு நழுவ முயற்சித்தார்கள். (பொறுப்பு) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அங்கிருந்தவர்களை நிறுத்தி விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் அவர்களை தனித்தனியாக விசாரிக்கப்பட்டது. சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்த கீழ்கண்ட அலுவலர்களையும். அலுவலகத்தின் உள்ளே இருந்த கீழ்கண்ட வெளிநபர்களையும் தனித்தனியாக விசாரணை செய்து. சோதனை செய்யப்பட்டது. அலுவலகத்தையும் மற்றும் வட்டாட்சியரின் அரசு வாகனமான TN82 G 0180 BOLERO வும் சோதனை செய்யப்பட்டது. சோதனையில் அவர்கள் வைத்திருந்த தொகைக்கு சரியான முகாந்திரம் கூறியவர்களிடம் அந்த தொகை அவரவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் சரியான முகாந்திரம் கூறதாக கீழ்கண்ட அலுவலர்களிடமிருந்து. அவர்களால் சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது. குற்றமுறு நடவடிக்கையின் மூலம் வட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலக அலுவலர்கள் கையூட்டாக பெற்று கொடுப்பதற்காக வைதிருந்த பணம் என்ற சந்தேகத்தின் பேரில் கீழ்கண்ட விபரப்படியான தொகை திடீர் ஆய்வின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்ட விபரம் பின்வருமாறு

வ. எண்	பெயர், பதவி மற்றும் முகவரி (திருவாளர்கள்)	திரும்ப ஒப்படைக்கப்பட்ட ரூபாய்	கைப்பற்றப்பட்ட ரூபாய்
1.	திரு.R.ராஜரத்தினம், வட்டாட்சியர்	--	4,850/-
2.	திரு.R.ராஜரத்தினம், வட்டாட்சியர் அவர்களின் அரசு வாகனம் TN82 G 0180 BOLERO ன் Dash board	--	25,000/-
3.	திரு.S.கணேஷ்குமார். TEXCO Driver	--	5,720/-
4.	திரு.R.பாபுதுரை V.A.O.உ மையாள்பதி.		2,500/-
5.	திரு. R.பிரதிஷ். V.A.O, ஆலாலசுந்தரம்.		4,700/-
6.	திருமதி.S.கனிமொழி. வட்ட துணை ஆய்வாளர்.	13,70/-	--
7.	திருமதி. R.கௌசல்யா. வருவாய் ஆய்வாளர், மாதானம்.	--	--
8.	திருமதி. C. அறிவழகி. வட்ட சார் ஆய்வாளர்.	500/-	--
9.	திரு.S.வேல்முருகன், முதுநிலை வரைவாளர்.	220/-	
10.	திரு.சே.மணிபாலன், நில அளவர்.	550/-	--
11.	திருமதி.கா.தமிழ்வாணி. சார் ஆய்வாளர்.	880/-	--
12.	திருமதி.ம. அகிலா, V.A.O, புங்கனூர்.	950/-	--
13.	திரு.S. பிறைசந்திரன், V.A.O, புத்தூர்.	60/-	--
14.	திரு.K.செந்தில்நாதன், V.A.O புதுப்பட்டினம்.	--	
15.	திரு.K.கமலகண்ணன், அலுவலக	--	--

	உ தவியாளர்.		
16.	திரு.K.ரமேஷ்பாபு. Data entry operator	--	--
17.	திரு.R.பிரகாஷ். முதுநிலை வருவாய் ஆய்வாளர்.	180/-	
18.	திரு.G.முருகன் V.A.O தாண்டவன்குளம்.	290/-	--
19.	திரு.R.வெங்கடேசன், V.A.O பழையபாளையம்.	470/-	--
20.	திரு.V.முத்துகுமார். கிராம உ தவியாளர், கூத்தியம்பேட்டை.	10/-	--
21.	திரு.T.அருள்வினாயகம். இளநிலை உ தவியாளர்.	90/-	--
தனிநபர்கள்			
22.	திரு.மணிபாரதி. த/பெ. மாசிலாமணி, கொன்றத்தூர்.	--	--
23.	திரு.பிரேம்குமார் த/பெ ராஜேந்திரன், மாதானம்.	--	--
24.	திரு.கலைசெல்வன் த/பெ சுந்தரராஜ். சீர்காழி.	170/-	--
25.	திரு. சந்தேஷ்குமார், த/பெ கபுர்சந்த். சீர்காழி.	600/-	--
26.	திருமதி.ரேவதி க/பெ ரவி, அலகுடி	--	--
27.	திரு.பாலசந்திரன் த/பெ நாரயணசாமி சீர்காழி.	1,160/-	--
	கூடுதல்	7,500/-	42,770/-

மேற்படி நபர்களிடம் அவர்கள் வைத்திருந்த பணத்திற்குண்டான காரணத்தை கேட்க அந்த பணத்திற்குண்டான சரியான முகாந்திரம் தெரிவித்ததாலும். மேலும் அலுவலர்கள் வைத்திருந்த பணம் பற்றி. பணம் கையிருப்பு பதிவேடு பராமரிக்கப்படுவதில்லை என சீர்காழி வட்டாட்சியர் தெரிவித்ததாலும். மேற்கண்ட விவரப்படியான பணம் அவரவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் வெளிநபர்கள் அனைவரையும் தனித்தனியாக விசாரணை செய்து அவர்கள் வைத்திருந்த பணத்திற்கு சரியான முகாந்திரம் கூறியதால் அவரவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டு. அனுப்பிவைக்கப்பட்டார்கள். மேலும் மேற்படி பட்டியலில் கண்ட அலுவலகத்தில் ஆஜரில் இருந்த 1) திரு.R.ராஜரத்தினம். வட்டாட்சியர். சீர்காழி அவர்களை விசாரித்து சோதனை செய்தபோது அவர் தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்த பர்சிலிருந்து ரூபாய். 4,000/- (500x8=4000). மற்றும் அவரது சட்டை பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூபாய். 850/-(500x1=500. 200x1=200. 100x1=100. 20x2=40. 10x1=10). 2) திரு.R.ராஜரத்தினம். வட்டாட்சியர் அவர்களின் அரசு வாகனம் TN82 G 0180 BOLERO வை சோதனை செய்ய வாகனத்தின் Dash board லிருந்த காக்கி நிற கவரிலிருந்து ரூபாய் 25,000/- (500x48=24000. 100x10=1000) 3) திரு.S.கணேஷ்குமார். TEXCO Driver அவர்களை விசாரித்து சோதனை செய்தபோது அவர் தனது சட்டையின் மேல்பையிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூபாய். 5,720/-(500x11=5500. 100x1=100. 50x1=50. 20x3=60. 10x1=10). 4) திரு.R. பாபுரை V.A.O. உமையாள்பதி அவர்களை விசாரித்து சோதனை செய்தபோது அவர் தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்த மணி பர்சிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூபாய். 2,500/- (500x4=2000. 100x4=400. 50x2=100). 5) திரு. R.பிரதீஷ். V.A.O. ஆலாலசுந்தரம் அவர்களை விசாரித்து சேதனை செய்தபோது அவர் தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்த மணி பர்சிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூபாய். 4,700/-(500x9=4500. 100x1=100. 20x1=20. 10x3=30). ஆக மெத்தம் ரூபாய். 42,770/- தொகை கைப்பற்றப்பட்டது. மேற்கண்ட அலுவலர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் குற்றமுறு செய்கையின் மூலம் வட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலக அலுவலர்கள் கையூட்டாக பெற்று/

கொடுப்பதற்காக வைதிருந்த பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்கண்ட **தொகை ரூ.** 42,770/- திடீர் ஆய்வில் மேல்நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.R.ராஜரத்தினம், வட்டாட்சியர், சீர்காழி அவர்களின் 9952328268 என்ற தெலைபேசி G-pay transaction விபரங்களை ஆய்வு செய்த போது, கடந்த 19.04.2026 ஆம் தேதியிலிருந்து 15.07.2026 ஆம் தேதி வரை உள்ள transaction- இல் மெத்தம் ரூபாய் 1,16,500/-தொகையானது அவரது அலுவலக உதவியாளர் திரு. கமலகண்ணன் G-pay (தெலைபேசி எண் 8248601723) மற்றும் வாகன ஒட்டுனர் திரு. கணேஷ்குமார் அவர்களின் G-pay (தெலைபேசி எண் 7070090750) யிலிருந்து திரு.R.ராஜரத்தினம், வட்டாட்சியர், சீர்காழி அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள விபரம் தெரியவருகிறது. மேலும் அலுவலகத்தில் இருந்த பதிவேடுகளை ஆஜர் படுத்த வட்டாட்சியர் சீர்காழி அவர்களிடம் தெரிவித்ததன் அடிப்படையில் 2026 ஆம் ஆண்டிற்கான சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்தின் (1) வட்ட அலுவலகம் சீர்காழி வருகை பதிவேடு 2026, (2) வருகை பதிவேடு சுருக்கம் 2026 வட்ட அலுவலகம் சீர்காழி, (3) தாமத வருகைபதிவேடு 2026, (4) சீர்காழி வட்ட வழங்கள் அலுவலகத்தில் 17.07.2026ம் தேதி இணையத்தில் நிலுவையில் உள்ள விபரங்கள் பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணம், (5) சீர்காழி வட்ட அலுவலகத்தில் 17.07.2026ம் தேதி இணைய வழி மனுக்கள் நிலுவையில் உள்ள விபரங்கள் பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணம், (6) சீர்காழி வட்ட அலுவலகம் நில அளவை பிரிவு அலுவலகத்தில் 17.07.2026 ம் தேதி இணையத்தில் நிலுவையில் உள்ள மனுக்களின் விபரங்கள் பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணம், (7) சீர்காழி சமூக பாதுகாப்பு திட்ட அலுவலகத்தில் 17.07.2026 ம் தேதி இணையத்தில் நிலுவையில் உள்ள மனுக்களின் விபரங்கள் பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணம் ஆகியவை கைபற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் ஆய்வில் தொகை கைப்பற்ற 1 முதல் 4 வரை உள்ளவர்களுக்கு தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீர் ஆய்வானது இன்று 17.07.2026 ஆம் தேதி 23.45 மணிக்கு முடிக்கப்பட்டது. மாண்பமை அம்மா, திரு.N.சுகுமாறன், த/பெநாராயணசாமி, தனி வட்டாட்சியர், குடிமைப் பொருள்

வழங்கல் அலுவலகம், மயிலாடுதுறை பொறுப்பு மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர், மயிலாடுதுறை என்பவரிடமிருந்து வேண்டுகோள் கடிதம் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை 18.07.2026 ஆம் தேதி காலை 09.00 மணிக்கு பெற்று, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குனரகத்திலிருந்து உரிய அனுமதி பெற்றும், சட்ட ஆலோசனை பெற்றும் மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.03/2026, சட்ட பிரிவு 106 BNSS, 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act 1988 as amended by The Prevention of Corruption (Amendment) Act in 2018 இன் படி இன்று 18.07.2026 ஆம் தேதி மதியம் 13.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யப்பட்டது.

(ம.அருள்பிரிய)
காவல் ஆய்வாளர். 18/07/2026
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
மயிலாடுதுறை.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், வேண்டுகோள் கடிதம் அசல், திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் அசல், எதிரிகள் 1) திரு.Rராஜரத்தினம், வட்டாட்சியர், சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம், 2)திரு.Sகணேஷ்குமார், TEXCO Driver, சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம், 3)திரு.R. பாபுதுரை V.A.O, உமையாள்பதி, சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம், 4) திரு. R.பிரதீஷ், V.A.O, ஆலாலசுந்தரம், சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம் ஆகியவர்களின் வாக்குமூலங்களின் அசல் ஆகியவற்றை மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிபதி மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை அவர்களுக்கு பணிந்து சமர்பித்தும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

(ம.அருள்பிரிய)
காவல் ஆய்வாளர். 18/07/2026.
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
மயிலாடுதுறை.